# தேவனுடைய ஆணை

**தேவனுடைய ஆணை என்றால் என்ன?**

தேவன் தனது முழு படைப்பிற்கும் ஒரு இறையாண்மை மற்றும் புரிந்துகொள்ளப்பட்ட திட்டத்தை நித்தியத்தில் வைத்திருப்பதாக வேதாகமம் வெளிப்படுத்துகிறது. இந்தத் திட்டம் இறையியலாளர்களால் 'தேவனுடைய ஆணை' என்று குறிப்பிடப்படுகிறது. பூமிக்குரிய ஆட்சியாளர்களால் எடுக்கப்பட்ட தீர்ப்பின் இறையாண்மையைக் குறித்து பேசும்போதும்கூட இந்த 'ஆணை' என்கிற வார்த்தை பயன்படுத்துகிறது.

மனிதனின் ஆணைகளைப் பற்றி நாம் பேசும்போது, கோரேஸ் ராஜாவின் ஆணை (எஸ்றா 6:3; 6:12) & அகாஸ்வேரு ராஜாவின் ஆணை (எஸ்தர் 3:13) இவைகள் யாவும் அந்த இராஜாவின் அதிகார எல்லைக்கு உட்பட்டவைகள் ஆகும்; இதற்கு மக்கள் கீழ்ப்படிய விருப்பம் கொண்டிருக்கவேண்டும்; மட்டுமல்ல மனித திட்டத்தை (ஆணை) மாற்றலாம் அல்லது திருத்தி அமைக்கலாம். ஆனால் தேவனின் ஆணை முழுமையானது (சரியானது); மாற்ற முடியாதது; அது மீறமுடியாதது; இது நமது கீழ்ப்படிதலின் அடிப்படையில் அமைந்ததல்ல, அது நிறைவேறியே தீரும்; இது தேவனின் எல்லையற்ற சக்தியின் ஆதரவைக் கொண்டுள்ளது; ஒருபோதும் இழக்க முடியாது. அவர் கட்டளையிடுவதால் அது நிறைவேறும், ஏனெனில் அவரே தேவன். தேவன் பரிபூரணர் (மத் 5:48) ஆகவே அவருடைய திட்டமும் பூரணமானது மற்றும் சரியானது. எதிர்பாராத சில சூழ்நிலைகள் காரணமாக அவர் ஒருபோதும் தனது மனதை மாற்றிக்கொள்ளவோ அல்லது யாரும் ஒத்துழைக்காததால் அவருடைய திட்டத்தை வேறு வழியில் செயல்படுத்தவோ தேவையில்லை (மல் 3: 6; யாக்கோபு 1:17; எண் 23:19)

**வரையறை**

அவருடைய நித்திய நோக்கத்தை அவருடைய சித்தத்தின் ஆலோசனையின்படி, நிறைவேறும் அனைத்தையும் அவருடைய மகிமைக்காக நியமிக்கிறார். சுருங்கச் சொல்லப்போனால் அவருடைய நித்திய முடிவுவானது அனைத்து விஷயங்களையும் நிறைவேற்றுகிறது.

**தேவனுடைய ஆணையை பற்றி வேதாகமம் கற்பிப்பது என்ன?**

A. <u>பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்களுக்கு,</u> தேவனுடைய சித்தம், தேவனுடைய அறிவு மற்றும் அவருடைய செயல் ஆகியவற்றைத் தவிர வேறு எதுவும் சந்தோஷப்படுத்தமுடியும் என்று நினைத்துப்பார்க்க முடியவில்லை. அவர்கள் தேவன் உலகத்தின் எல்லா செயலிலும் இருக்கிறார் என்பதையும், அவர் எல்லாவற்றையும் திட்டமிட்டு செயல்படுத்துகிறார் என்பதையும் விசுவாசித்தார்கள்.

- மதில்களை கட்டுவதாக இருக்கட்டும் அல்லது குளம் உருவாக்குவதாக இருக்கட்டும் அது தேவனுடைய ஆணையாக கருதினார்கள் (ஏசா 22:11)
- உயிர்த்தெழுதலை குறித்ததான மேசியாவின் சங்கீதங்கள் (சங் 2:7)
- தேவனுடைய படைப்பில் அவருடைய ஆணை மாறானதாக இருக்கிறது (சங் 148:6)
- தேவன் ஒரு நித்திய ஆணையினால் கடலுக்கு எல்லையை அமைத்துள்ளார். (எரே 5:22)
- தேவனுடைய ஆணைப்படி அசீரிய மன்னனான செனகெரிப், எருசலேமுக்கு எதிரான தேவனுடைய நியாயத்தீர்ப்பின் முகவராக இருக்கப்போகிறார் (ஏசா 37:26)
- தேவனுடைய ஆணையை எதிர்ப்பதனால் வரும் பயனற்ற நிலையை குறித்து ஏசாயா சித்தரிக்கிறார் (ஏசா 14:27)
- நேபுகாத்நேச்சார் மீது வந்த நியாயத்தீர்ப்பு (தானி 4:24)
- 70 வாரங்களின் தீர்க்கதரிசனம் (தானி 9:24)
- அந்திகிறிஸ்துவின் செயல்பாடுகள் (தானி 11: 35,36)

- தேவனால் நியமிக்கப்பட்ட பொருத்தமான நேரம் (பிர 3:1,2).

மேற்சொன்ன வசனங்கள் யாவும் தேவன் திட்டமிட்டு அவருடைய ஆணையின்படி செயல்படுத்துகிறார் என்பதற்கான ஆதாரங்கள் ஆகும்.

B. <u>புதிய ஏற்பாடும்</u> தேவனின் ஆணையைப்பற்றி மேலும் வெளிப்படுத்துகிறது. புதிய ஏற்பாடு நேரடியாக 'ஆணை' என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை என்றாலும் அதற்கு நிகராக மற்ற குறிப்பிடத்தக்க சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

1. **நற்செய்தி நூல்களில்,** தீர்க்கதரிசன நிறைவேறுதல்களின் மூலம் தேவனின் ஆணையானது வெளிப்படுத்தப்படுகின்றன.
    - இயேசுவின் கன்னிப்பிறப்பு (மத் 1:22)
    - இயேசு பிறந்த இடம் (மத் 2:5.6)
    - குழந்தைகளின் படுகொலை (மத் 2:16-18)
    - யோவான்ஸ்நானகனின் ஊழியம். (மத் 3:1-3)
    - அவரை மறுதலித்தல் (லூக் 22:22)
2. **அப்போஸ்தலர் நடபடிகளை** வாசிக்கையில் கிறிஸ்துவின் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகள் தேவனின் ஆணையை அங்கீகரிக்கின்றன என்பதை காணலாம்.
    - தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் இயேசு ஒப்புக்கொடுக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார் (2:23).
    - அந்தப்படி உம்முடைய கரமும் உம்முடைய ஆலோசனையும் முன் குறித்தவைகள் யாவையும் செய்யும்படி, ஏரோதும் பொந்தியுபிலாத்தும், புறஜாதிகளோடும் இஸ்ரவேல் ஜனங்களோடுங்கூட, நீர் அபிஷேகம்பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு விரோதமாய், மெய்யாகவே கூட்டங்கூடினார்கள் (4: 27,28).
    - பவுலின் அநேக பிரசங்கங்களில் தேவனுடைய ஆணை வெளிப்பட்டதை காணமுடியும்
3. **நிருபங்களை** வாசிக்கையிலும் தேவனுடைய ஆணைகளை நாம் அறிந்துகொள்ளமுடியும்.
    - நம்மைமீட்கும் பணியில்... (கலா 4: 4)
    - இஸ்ரவேலர் மேசியா மீது வைத்த அவநம்பிக்கை மற்றும் அவரை நிராகரித்தல். (ரோமர் 11:7-10)
    - தேவனுடைய குடும்பத்தில் புறஜாதிகளும் சேர்க்கப்படுதல் (கலா 3: 8)
    - கிறிஸ்து விசுவாசிகளை தேர்ந்தெடுத்தல். (எபே 1:4-5)
    - தேவன் தம்முடைய சித்தத்தின் ஆலோசனையின்படி எல்லாவற்றையும் செய்கிறார். (எபே 1:12)

**தேவனுடைய ஆணையின் சிறப்பியல்புகள்**

1. தேவனுடைய நித்தியத்தில் தீர்மானிக்கப்பட்டது, ஆனால் அது ஏற்ற நேரத்தில் செயல்படுத்தப்படுகிறது.
    - அவருடைய ஆணை நித்தியமானது (எரே 5:22).
    - உலகத்தோற்றத்துக்கு முன்னே விசுவாசிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் (எபே 1:4). இந்த சொற்றொடரின் உயர்ந்த பொருள் 'எல்லா நித்தியத்திற்கும்' என்பதாகும்.
    - கிறிஸ்துவுக்கான தேவனின் திட்டமும் நித்தியத்தில் நிர்ணயிக்கப்பட்டது, ஆனால் குறிப்பிட்ட நேரத்தில் வெளிப்படுத்தப்பட்டது

- அவர் நம்மை நித்தியத்தில் அழைத்தார், ஆனால் நேரம் வரும்போது நம்மைக் இரட்சிக்கிறார்.

2. தேவனுடைய ஆணையானது அவருடைய பங்கில் அவர் சுயமாக முடிவு செய்கிறார்.
    - தேவனுடைய ஆணை (திட்டங்கள்) முற்றிலும் இறையாண்மை கொண்டவை, எதற்கும் நிபந்தனை இல்லை. ரோமர் 11ம் அதிகாரம் தேவனுடைய மகத்துவத்தையும் இறையாண்மையையும் கையாள்கிறது. இதில் ரோமர் 11:34 - தேவனின் இறையாண்மைக்கு நல்ல உதாரணம்.
    - அவருடைய ஆணை (கட்டளைகள்) அவருடைய சொந்த அறிவை அடிப்படையாகக் கொண்டவை காரணம் அவருக்கு எல்லாம் தெரியும்.
    - அவர் எந்த முடிவும் எடுக்க யாரும் அவரை கட்டாயப்படுத்துவதில்லை.
    - வெளியிலிருந்து அவரை ஆதிக்கம் செலுத்த அவர் ஒரு பொருளும் அல்ல
3. தேவனுடைய ஆணையானது அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்கிறது.

அவர் தனது விருப்பதிதின்படி எல்லாவற்றையும் செய்கிறார் (எபே 1:12) அதாவது தேவனுடைய திட்டத்திலிருந்து எதுவும் நிறைவேறாமல் போவதில்லை.மட்டுமல்ல தேவனுடைய திட்டத்தில் இல்லாத எதுவும் நம்முடைய வாழ்க்கையில் வருவதுமில்லை.

4. தேவனுடைய ஆணையானது நல்லதும், ஞானமான திட்டமாகவும் உள்ளது.
    - தேவன் நல்லவர் (நாகூம் 1: 7), ஆகவே அவர் நல்லது செய்கிறார் (ரோமர் 8: 28) அவரது திட்டமும் நல்லதாகவே உள்ளது.
    - கடவுள் ஞானமுள்ளவர், அவருடைய திட்டமும் ஞானமானது (ரோமர் 16:27).
    - பவுல் இஸ்ரேலுக்கான தேவனுடைய திட்டத்தை ரோமர் 9-11 வரையுள்ள அதிகாரங்களில் விளக்கிய பிறகு தேவனுடைய ஞானத்தை குறித்து இந்த ‘சொற்றொடருடன்’ முடிக்கிறார். ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! (ரோமர் 11:33).
5. தேவனுடைய ஆணை அனைத்தும் அவரின் மகிமைக்காக இருக்கிறது..
    - தேவனை மகிமைப்படுத்தும் நோக்கத்திற்காகவே தேவன் அனைத்தையும் படைத்துள்ளார் (சங் 19:1)
    - தேவன் தன்னுடைய மகிமைக்காக மனிதனை உருவாக்கினார் (ஏசா 43:7)
    - தேவனுடைய மீட்பின் முழு செயல்முறையும் அவருடைய மகிமையின் திட்டமாகும் (எபே 1:4-6)
    - விசுவாசிகளின் அனுதின வாழ்க்கை தேவனின் மகிமைக்காக இருக்கவேண்டும் (I கொரி 10: 31)
    - நம்முடைய ஆவிக்குரிய வரங்களை நாம் தேவனுக்கு மகிமையாக பயன்படுத்தவேண்டும் (I பேதுரு 4:11)
    - நம்முடைய ஆராதனை தேவனுக்கு மகிமையாக ஏற்க வேண்டும் (வெளி 5:12)
6. தேவனுடைய ஆணை மனிதனுடைய பொறுப்பை ரத்து செய்யாது.

தேவனுக்கென்று நிறைவேற்றுவதற்காக ஓர் இறையாண்மை திட்டம் உண்டு, அது ஒரு பக்கம்; மறுபக்கம் ஒரு தனிப்பட்ட மனிதனுடைய செயலினால் அதை தடைசெய்ய முடியாது. மனிதனின் பாவச்செயல்களுடன் தேவனுடைய ஆணையை தொடர்புபடுத்திப்பார்க்கும் பொழுது இந்த கொள்கை மிகவும் முக்கியமானது. இது எப்படி சாத்தியமாகும்?

a. யோசேப்பின் வாழ்க்கை (ஆதி 50:20)

யோசேப்பின் சகோதரர்கள் அவனை அடிமைத்தனத்திற்கு விற்றுபோட்டார்கள்; ஆனால் தேவன் அந்த பாவச்செயலை யாக்கோபின் குடும்பத்திற்கு நன்மை செய்ய பயன்படுத்தினார்.

b. <u>இயேசு சிலுவையில் அறையப்படுதல் (அப்போஸ்தலர் 2:23; 4: 27,28)</u>

கிறிஸ்து காட்டிக்கொடுக்கப்படுதல், அவருடைய பாடுகள் மற்றும் சிலுவையில் அறையப்படுதல் இவை அனைத்தும் தேவனுடைய ஆணையின்படியே நடந்தேறின; ஆனால் இதில் மனிதனுடைய பொறுப்பு என்னவென்றால்: இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள்.

c. <u>சுவிசேஷம் அறிவித்தல்</u>

தேவன் தான் தேர்ந்தெடுத்தவர்களை இரட்சிக்கிறார் என்று வேதம் சொல்கிறது. அப்படியானால் ஏன் சுவிசேஷம் செய்ய வேண்டும்? காரணம் இது மனிதனின் பொறுப்பு (மத் 28:19-20; யோவான் 15:16. ரோமர் 10:14).

7. தேவனுடைய ஆணை மற்றும் மனிதனின் தனிப்பட்ட இரட்சிப்பு

a. <u>முன்குறித்தல்</u>

முன் குறித்தல் என்ற சொல்லுக்கு சரியான அர்த்தம் 'நமக்கு முன்பாக ஒரு எல்லையை நியமிப்பது' ஆகும்.

கிறிஸ்துவின் மரணத்தை குறித்ததான முன்குறித்தலைப்பற்றி வேதம் தெளிவாக கூறுகிறது (அப் 4:27). அதேவேளையில் விசுவாசிகளின் இரட்சிப்பை குறித்ததான முன்குறித்தலை பற்றியும் நாம் காணமுடியும் (ரோமர் 8:29, 30; எபே 1:4). நம்முடைய இரட்சிப்பு மட்டுமல்ல, நம்முடைய நித்திய ஜீவனும் தேவனால் முன்குறிக்கப்பட்டுள்ளது (எபே 1:11,12). தேவனுடைய ஆணையை நிறைவேற்றுவதில் தேவன் இறையாண்மையை தீர்மானித்திருக்கிறார்.

எபேசியர் 1 ஆம் அத்தியாயத்தில் வெவ்வேறு முன்குறித்தலை பார்க்கிறோம்

- தேவனுடைய தெரிந்தெடுப்பு (வச. 4)
- தேவனுடைய அன்பு (வச. 4)
- தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே... (வச. 5)
- இறுதியாக தேவனை மகிமைப்படுத்துகிறது (வச 11).

<u>முடிவுரை</u>: தேவன் முன்கூட்டியே தெரிந்தெடுத்து நம்மீது வைத்திருக்கும் மிகுந்த அன்பினால், நம் வாழ்க்கையின் எல்லைகளை குறித்து, இறுதியில் அவரை மகிமைப்படுத்தும் வழிகளில் நடத்துகிறார்.

b. <u>தேர்ந்தெடுத்தல்</u>

'எக்லிக்டோஸ்' என்ற கிரேக்க வார்த்தையின் இந்த பொருள் 'வெளியே அழைக்கப்படுதல்' அல்லது 'வெளியேற்றப்படுதல்' அல்லது 'தேர்வு செய்யப்படுதல்' என்பதாகும். இந்த சொல்லானது வெவ்வேறு தொடர்புகளில் பயன்படுத்தப்படுகிறது.

- இந்த வார்த்தை இயேசு கிறிஸ்துவுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது (லூக்கா 23:35; 1 பேதுரு 2: 4)
- இந்த வார்த்தை தேவதூதர்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது (1 தீமோ 5:21)
- உபத்திரவ நாட்களின்போதுள்ள யூதவிசுவாசிகளுக்கும் இந்த வார்த்தை பயன்படுத்தப்படுகிறது (மத் 24: 22, 24)
- தெரிந்தெடுக்கப்பட்ட சபைக்கும் இந்த வார்த்தை பயன்படுத்தப்படுகிறது (1 பேதுரு 1:1; 2:9; ரோமர் 8:33)
- கிறிஸ்து 'அவர்களை' தேர்ந்தெடுத்தார் என்று இந்த வார்த்தை 'வினைச்சொல்லாக' அப்போஸ்தலர்களுக்கும், விசுவாசிகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது (யோவான் 13:18; 1 கொரி 1:27, 28).
- அப்போஸ்தலனாகிய பவுலை குறித்து சொல்லும்பொழுது 'நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்' என்று 'பெயர்ச்சொல் வடிவத்தில்' இந்த வார்த்தை சொல்லப்பட்டிருக்கிறது (அப் 9:15)

சபையை குறித்த பட்சத்தில் தெரிந்தெடுத்தல் என்பது விசுவாசித்து, இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாக இணைக்கப்படுதல் ஆகும். மிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்துக்கும், ஒரு பாத்திரத்தைக் கனவீனமான காரியத்துக்கும் பண்ணுகிறதற்கு மண்ணின்மேல் அவனுக்கு அதிகாரம் இல்லையோ? இன்று பவுல் தேவனுடைய இறையாண்மையை குறித்து பேசுகிறார் (ரோமர் 9:21). தேர்ந்தெடுத்தல் குறித்து நம்மை நாமே தீர்ப்பு செய்யாமல் அமைதியாக இருந்து, தேவனுடைய அன்பான இறையாண்மையை பார்த்து தீர்மானிக்கும்போது அதை ஏற்றுக்கொள்வதில் எந்த ஒரு சிரமமும் இருப்பது இருக்காது.

c. முன்னறிதல்

'க்னோஸ்கோ' என்கின்ற இந்த கிரேக்க வார்த்தையானது தேவனுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இது தேவனுடைய ஒரு சிறப்பம்சமாகும்; சகலத்தையும் அறிந்தவர்; அதாவது சர்வ ஞானி.

கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது (அப் 2:23); விசுவாசிகள் தெரிந்துகொள்ளப்படுதல் (I பேதுரு 1:2); முன்னறிந்துகொண்ட மீதியான இஸ்ரவேலர் (ரோமர் 11:2) இவர்களெல்லாம் தேவனுடைய சர்வ ஞானத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

**பொதுவான விளக்கம்:** சுவிசேஷத்திற்கு நம்முடைய பிரதியுத்திரம் என்ன என்பதை தேவன் முன்பே அறிவார், எனவே இந்த முன்னறிவின் அடிப்படையில் விசுவாசிகளைத் தெரிந்தெடுத்தார். *கிரேக்க வார்த்தையின் ஆய்வானது இந்த கருத்தை ஆதரிக்கவில்லை. 'க்னோஸ்கோ' என்பது சாதாரண அறிவைவிட அதிகமாகும், இதனுடைய சொல் பொருளானது ஒரு மனிதன் தனது மனைவியிடம் வைத்திருக்கும் நெருக்கமான உறவின் அடிப்படையிலானது. தேவனுடைய தெரிந்தெடுப்பது என்பது தேவன் யாரிடத்தில் கிருபையாயிருந்து அழைக்கிறாரோ அவர்களை தம்மோடுகூட இருப்பதற்கு அழைக்கும் நெருக்கமான உறவின் அடிப்படியிலானது என்கிறது. இது முன்கூட்டியே அறியும் அறிவு அல்ல என்கிறது.* அப்படிச் சொன்னால், இஸ்ரேலரின் செயல்களைப் பற்றி தேவன் முன்கூட்டியே அறிந்திருந்தார், ஆரம்பத்திலிருந்து முடிவு வரை அவர்கள் தேவனுக்கு எதிராக கலகம் பண்ணுகிறவர்களாகவும், மேசியாவை மறுதலிக்கிறவர்களாகவும் காணப்பட்டார்கள். ஆக இஸ்ரவேலரை அவருடைய முன்னறிவின்படி தெரிந்தெடுத்தார் என்று சொன்னால் அவர்களுடைய அவிசுவாசத்திற்கு இங்கு பதில் இல்லையே!. ஆதலால் எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவன்மேல் இரக்கமாயிருக்கிறார், தேவன் தாம் முன்னறிந்துகொண்ட தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிடவில்லை என்று பவுல் கூறுகிறார் (ரோமர் 9:18; 11:2).

8. தேவனுடைய ஆணை மற்றும் மனிதனின் சுதந்திரம்

தேவனுடைய ஆணை என்பது எல்லாவற்றையும் உள்ளடக்கியது என்றால், தனிநபர்களாகிய நமக்கு என்ன தேர்வு சுதந்திரம் உள்ளது?

இந்த கேள்விக்கு பதிலளிக்க வேதாகமத்தை சமநிலையில் ஆராயவேண்டும். தேவனுடைய ஆணை பற்றி வேதம் நமக்குக் கற்பிக்கிறது, அதே நேரத்தில் நம்முடைய செயல்களுக்கான பொறுப்பையும் நமக்குக் கற்பிக்கிறது (எபே 1:11; லூக்கா 22:22).

தெய்வீக இறையாண்மை ஒருபோதும் மனிதப் பொறுப்பை ரத்துசெய்வதில்லை, அதாவது மக்கள் தங்கள் செயல்களுக்குப் பொறுப்பேற்கிறார்கள், பின்னர் அவர்களுக்கு தேர்வுசெய்யும் சுதந்திரம் இருக்கவேண்டும். இயற்கையான காரணங்கள் ஜனங்களை விசுவாசத்தை விட்டு விலகிசெல்லமுடியாது. தேவனுடைய அறிவு அவருடைய குமாரனாகிய கிறிஸ்து மூலமாகவே வருகிறது. (மத் 11:27,28)

- வச. 27 - தேவனின் இறையாண்மையை வலியுறுத்துகிறது
- வச. 28 - மனிதனுடைய பொறுப்பையும் அவனுடைய தேர்வையும் வலியுறுத்துகிறது.

பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும் (யோவான் 6:37) - இது தேவனின் இறையாண்மையை வலியுறுத்துகிறது. அதே வசனத்தில் 'என்னிடத்தில் வருகிறவனை' என்று பார்க்கும்போது அது மனிதனுடைய பொறுப்பையும் அவனுடைய தேர்வையும் வலியுறுத்துகிறது.

முடிவு: தேவனின் இறையாண்மை மற்றும் மனிதனின் சுதந்திரம் பற்றி நாம் விவாதிக்கும்போது, தேவனுடைய திட்டத்தில் பல்வேறு சிறப்பம்சங்கள் இருப்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

a. இறையாண்மையில் தேவனுடைய திட்டம் - இது எல்லாவற்றையும் உள்ளடக்கிய நிறைவேற்றப்படவேண்டிய தேவனுடைய ஆணையாய் இருக்கிறது. இது தவிர்க்கமுடியாதது மற்றும் மாறாதது. இதை நாம் வரலாற்றின் மூலமாகவோ அல்லது விஷயங்கள் நடக்கும்போதோ அறிந்துகொள்ளலாம்.
b. தேவனின் புலனுணர்வு (கண்டுணர்தல் சார்ந்த) திட்டம் - இது அவர் பரிந்துரைக்கும் அல்லது பாதுகாக்கும் திட்டமாகும். இந்தத் திட்டத்தில் அவருடைய ஒழுக்க ரீதியான காரியங்கள் அவருடைய வேதவசனத்தின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் மூலம் தெளிவாக நாம் அவைகளை அறியலாம்.
c. தேவனின் அனுமதிக்கப்பட்ட திட்டம் - இது தேவன் வெளிப்படுத்திய அல்லது பரிந்துரைக்கப்பட்ட திட்டத்திற்கு இணங்காதபோதுகூட அனுமதிப்பதைக் குறிக்கிறது.இதை நாம் அவர் வெளிப்படுத்திய வேதத்திற்கு முரணாக முடிவெடுப்பதன் மூலம் அறியமுடியும்.